கடந்த 26.05.2023ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருந்த நிலையில் இந்நீதிமன்ற M.P.09/2025 dated 21.03.2025ன் படி கு.வி.மு.ச 1973பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

<u>குற்றம் சுமத்தப்பட்டவர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>

1. எனக்கு சொந்த ஊர் எது என்றால், ஆசாரிப்பள்ளம் ஆகும். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால், IOB, மணவாளக்குறிச்சி கிளையில் Business Correspondence ஆக தற்காலிக பணியில் வேலை பார்த்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்கு எத்தனை வருடங்கள் தெரியும் என்றால், 10 வருடங்களாக தெரியும். நான் எந்த ஆண்டு முதல் பணி செய்து வருகிறேன் என்றால், 2005ம் ஆண்டு முதல் பணி செய்து வருகிறேன்.

2. குற்றம் சுமத்தப்பட்ட நபர் அதே வங்கியில் தான் பணிபுரிந்தார் என்றால், சரிதான். அவரும் Business Correspondence ஆக தான் வேலை செய்தார். குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனது உறவினரா என்றால், இல்லை. உடன் வேலை செய்ததால் நண்பர்கள் போல் பழகுவோம். குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது எவ்வளவு தொகைக்கு காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், ரூபாய் 15லட்சத்து 12ஆயிரம் ஆகும்.

3. எனக்கு மாத வருமானம் எவ்வளவு என்றால், 11ஆயிரம் ஆகும். எனது வருமானம் எனது குடும்பச் செலவிற்கு போதுமானதாக இருக்கும் என்றால், எனது கணவர் Repoter ஆக பணிபுரிந்து வருவதால் அவர் வருமானமும் சேர்த்து நாங்கள் குடும்பச் செலவுகளை பார்க்கிறோம். தற்சமயம் எனது கணவர் பணியில் இருக்கிறாரா என்றால், இல்லை. தற்சமயம் எனது குடும்ப செலவுகளை நான் தான் பார்த்துக் கொள்கிறேன் என்றால், சரிதான்.

4. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு கொடுக்கப்பட்ட தொகை எந்த வகையில் என்னிடம் இருந்தது என்றால், எனது நகைகளை IOB, மணவாளக்குறிச்சி கிளையில் அடகு வைத்தும் மேலும் ஒரு சீட்டுப்பணம் எடுத்து கொடுத்தேன். நான் வட்டிக்கு பணம்

கொடுக்கும் நபர் என்றால், இல்லை. நான் 10பைசா வட்டிக்கு பணம் கொடுத்து அதிக வட்டி பெற்று வருகிறேன் என்றால், இல்லை.

5. IOB, மணவாளக்குறிச்சி கிளையில் எவ்வளவு தொகைக்கு நகைகள் அடகு வைத்தேன் என்றால், 4–5 தடவை எனது நகைகளை அடகு வைத்து பணம் கொடுத்தேன். அதற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால், இயலும். நான் எங்கு வைத்து குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு பணம் கொடுத்தேன் என்றால், வங்கியில் வைத்துக் கொடுத்தேன்.

6. நான் வங்கியில் வைத்து பணம் கொடுக்கவில்லை என்றாலும், அதிக வட்டி பெறும் எண்ணத்தோடு வேறு நபர்களுக்கு குற்றம் சுமத்தப்பட்ட நபர் மூலம் வட்டிக்கு பணம் கொடுத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர் மூலம் வட்டி மற்றும் அசலை திரும்பப் பெறும் வழக்கம் உள்ளது என்றால், சரியல்ல. மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபர் மூலம் செய்யும் வட்டித் தொழிலுக்காக அவரிடமிருந்து செக்யூரிட்டியாக காசோலை வாங்கி அதனை பயன்படுத்தி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

7. நான் பல நபர்களுக்கு வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறேன் என்றால், சரியல்ல. நான் வருமான வரி தாக்கல் செய்து வருகிறேன் என்றால், சரிதான். அந்த ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால், இயலும். நான் என்ன படித்துள்ளேன் என்றால், பட்டப்படிப்பு படித்துள்ளேன். நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள காசோலை எண் மற்றும் அதன் தேதி தெரியுமா என்றால், காசோலை எண் 352992, நாள் 29.12.2022 ஆகும்.

8. காசோலையை யார் நிரப்பிக் கொடுத்தார் என்றால், குற்றம் சுமத்தப்பட்ட நபர் நிரப்பிக் கொடுத்தார். நான் குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் இருந்து காசோலையை மிரட்டிப் பெற்று அதனை நான் பூர்த்தி செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துவிடுவேன் என்று குற்றம் சுமத்தப்பட்ட நபரை மிரட்டி இவ்வழக்கு காசோலையை பெற்றேன் என்றால், சரியல்ல. மேற்படி சங்கதிகளை நான் எனது புகார்மனுவின் பத்தி 5 ல் குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரியல்ல.

9. குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஒரு ஊனமுற்ற நபர் என்றால், சரிதான். நான் பல தவணையாக குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்பட்ட நிலையில் காசோலையில் எவ்வாறு 15லட்சத்து 12ஆயிரம் என குறிப்பிட்டுள்ளது

என்றால், குற்றம் சுமத்தப்பட்ட நபர் தான் அனைத்துக் கடனுக்கும் சேர்த்து மேற்படி தொகையை எழுதிக் கொடுத்தார். குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஒரு ஊனமுற்றநபர் என்பதால் அதனை சாதகமாக பயன்படுத்தி அவரிடம் இருந்து பணம் பெறும் எண்ணத்தோடு காசோலையை பெற்று இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

10. நான் Whatsapp–ல் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எவ்வளவு பணம் தரவேண்டும் என்று ஒரு காகிதத்தில் எழுதி அதனை புகைப்படம் எடுத்து அனுப்பினேனா என்றால், இல்லை. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் இருந்து வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எவ்வளவு தொகை பெற்றுள்ளேன் என்றால், எந்த தொகையும் பெறவில்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் பணம் வாங்கும் பொழுது வீடு கட்ட பணம் தேவை என்று பணம் வாங்கினார் என்றால், சரிதான்.

11. குற்றம் சுமத்தப்பட்ட நபர் வீடு கட்டவும் இல்லை, அதற்காக என்னிடம் கடன் வாங்கவில்லை என்றாலும், சரியல்ல. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் நிரப்பப்படாத காசோலை மட்டும் வாங்கி அதனை நான் பூர்த்தி செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் வேறு நபர்களுக்கு வட்டிக்கு பணம் கொடுத்து வழக்கு ஏதேனும் நிலுவையில் உள்ளதா என்றால், இல்லை.

12. குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றாலும் எங்கள் இருவருக்கும் இடையே ஏற்பட்ட சிறுபிரச்சனை காரணமாக நான் ஏற்கனவே அவர் கொடுத்த செக்யூரிட்டி காசோலையை பயன்படுத்தி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், குற்றம் சுமத்தப்பட்ட நபர் இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்யப்படவேண்டியவர் என்றாலும், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.